**ரம்பேவ பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 05 ஆந்திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 ஜுன் 12 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 09 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ரம்பேவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குப் பின்பற்றிய கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**(ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் ரூபா 517,000 பெறுமதியான பழைய வாசிகசாலைக் கட்டடம் உடைத்து அகற்றப்பட்டுள்ளதுடன், அப்பெறுமதி நிதிக் | கணக்குகளுக்கு இணக்கம் செய்யப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றுகளில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 2017 ஆம் ஆண்டிற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 123,040 பெறுமதியான கணக்காய்வுக் கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | அட்டுறு செலவினமாக இணக்கம் செய்யப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (iii) | செலுத்தப்பட வேண்டிய ஓய்வூதிய சம்பளம் ரூபா 843,637 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அட்டுறு செலவினமாக இணக்கம் செய்யப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (iv) | இறைச்சிக் கடை ஒன்றில் அறவிடப்பட வேண்டிய ரூபா 301,000 வீத வரி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (v) | நிலையான சொத்துப் பதிவேட்டில் காணப்படும் ரூபா 150,000 பெறுமதியான 2 காணிகள் மற்றும் பெறுமதி மதிப்பிடப்படாத 3 காணிகள் என்பனவற்றின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பேரேட்டுக் கணக்கு என்பன நாளது வரையறுக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். பெறுமதி இனங்காணப்பட முடியாத சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான ஊழியர் கடன் பதிவேட்டிற்கு அமைய அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 1,843,171 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுகளில் ரூபா 1,555,133 எனப் பதியப்பட்டிருந்தது. | உரிய பதிவேடுகளில் காணப்படும் வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டு சீராக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்பட வில்லை. |

**(ஈ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பல ஆண்டுகளுக்கு முன்னராக காணப்படும் ரூபா 1,407,014 பெறுமதியான கிடைக்க வேண்டிய 05 கணக்கு விடயங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நிலுவை அறவிடப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | பல ஆண்டுகளுக்கு முன்னராக காணப்படும் ரூபா 1,948,507 பெறுமதியான செலுத்த வேண்டிய 10 கணக்கு விடயங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய நிலுவை தீர்க்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**(உ) கணக்காய்விற்கு சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 63,682,510 பெறுமதியான 05 கணக்கு விடயங்களுக்கு உரிய உரித்துப் பத்திரம், மதிப்பீட்டறிக்கை, மெய்மையாய்வு சபை அறிக்கை, நிலுவையை உறுதி செய்யும் கடிதம், முதலீட்டுச் சான்று இருப்பு ஆவணம் என்பன சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமான முறையில் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை. | நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்துச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுட னான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) | | | |
| (i) | விதி 33 | வீத வரி செலுத்துவதைப் புறக்கணிப்பவர்கள் தொடர்பான பெயர் பட்டியல் மற்றும் சொத்துக்களைத் தடுப்பதற்கான பிடியாணை என்பன ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் தயாரிக்கப்படவில்லை. | விதிக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | விதி 217 மற்றும் 218 | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டடம் தொடர்பாக பட்டியல் ஒன்று பேணப்படாததுடன் அனைத்து காணி மற்றும் கட்டடம் என்பனவற்றை வருடாந்தம் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | விதிக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) | பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) | 2016 திசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | போக்குவரத்து நிலைமைகளில் காணப்படும் 13 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும் | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | ரூபா 27,300 செலவு செய்யப்பட்டு கைவிரல் அடையாள இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தாலும் வருகை மற்றும் வெளியேறல் என்பனவற்றை உறுதி | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும் | சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| | செய்வதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் ஒன்று பயன்படுத்தப்படவில்லை. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,637,638 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,761,489 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,546,000 | 1,394,480 | 1,093,965 | 943,643 | 736,000 | 1,294,050 | 365,812 | 643,128 |
| (ii) | வாடகை | 7,092,700 | 5,101,135 | 4,801,135 | 2,157,526 | 4,744,070 | 4,025,746 | 3,040,501 | 1,857,526 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 536,550 | 826,475 | 826,475 | - | 230,000 | 689,605 | 689,605 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 5,139,100 | 3,560,232 | 1,951,429 | 3,142,079 | 660,000 | 4,721,283 | - | 1,533,276 |
| | மொத்தம் | 14,314,350 | 10,882,322 | 8,673,004 | 6,243,248 | 6,370,070 | 10,730,684 | 4,095,918 | 4,033,930 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் சபையின் மொத்த நிலுவை வருமானம் ரூபா 4,033,930 ஆகக் காணப்பட்ட மொத்த தொகையில் நூற்றிற்கு 14.5 சதவீதமாகிய ரூபா 585,412 மட்டும் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,461,579 மற்றும் முத்திரைக்கட்டணம் ரூபா 1,680,500 ஆகும். | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம், முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரம்பேவ பிரதேச சபையின் பழைய வாசிகசாலை கட்டடம் புதுப்பிக்கப்படுவதற்கான செயற்றிட்டம் ரூபா 5,523,440 செலவில் நிறைவு செய்வதற்காக ஒப்பந்தக்காரருடன் ஒப்பந்தம் செய்யப்பட்டாலும் ரூபா 2,978,302 பெறுமதியான வேலை மட்டும் செய்யப்பட்டு செயற்றிட்டம் கைவிடப்பட்டிருந்தது. | செயல் நிறைவு செய்யப்படாதிருந்தாலும் வேலை நிறைவு செய்யப்பட்டதாகக் காட்டி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதற்காகப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இந்த நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அதனை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில் லை. |

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பொது நிர்வாக சுற்றறிக்கை 29/2014 இற்கு முரணாக சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த 14 ஊழியர்களிற்கு 2014 ஒக்தோபர் 24 ஆம் திகதி தொடக்கம் 2016 மே மாதம் வரை ரூபா 7,602,604 சம்பளம் செலுத்துவது தெடர்பாக பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முறையான பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய தரப்பினர்களிடம் இருந்து பணம் அறவிடுவதற்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) சபைக்கு சொந்தமான 12 வாகனங்களிற்கு பல வருடங்களாக வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்படவில்லை. | உரிய தினத்தில் வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) சபைக்கு சொந்தமான 07 வாகனங்கள் காப்புறுதி செய்யப்படவில்லை. | உரிய தினத்தில் காப்புறுதி பெற்றுக் கொள்வதற்கு | சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (ஆ) | சபையின் பதவிகளுக்குரியதாக வெற்றிடங்கள் காணப்பட்டன. | 10 21 | பதவியணி வெற்றிடம் நிரப்பப்படுவதற்கு உள்ளூராட்சிமன்ற திணைக்களத்துடன் இணைந்து தொழிற்பட வேண்டும் | சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 21 கடைகளில் 5 கடைகளின் பெறுமதி மட்டும் மதிப்பிடப்பட்டு வழங்கப்பட்டிருந்ததுடன், எஞ்சிய 16 கடைகள் மதிப்பிடப்படாது அவற்றின் பெறுமதி வழங்கப்பட்டிருந்தது. | கடை வாடகை மதிப்பிடப்பட்டு புதிய ஒப்பந்தம் கைச்சாத்திட்டு வழங்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 10 காணிகள் மற்றும் 45 மயானங்கள் ரூபா 83,167,973 பெறுமதியான 11 வாகனங்கள் என்பனவற்றின் உரித்தை சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்களைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சமர்ப்பிக்கப்படவில்லை. |

### 3.5.2 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 6,866,402 பெறுமதியான 04 சொத்து அலகுகள் பயன்படுத்தப்படாத காரணத்தினால் விளைவற்றுக் காணப்பட்டது. | புதுப்பிக்க முடியுமான சொத்துக்களைப் புதுப்பிப்பதற்கும் ஏனையவற்றை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சமர்ப்பிக்கப்படவில்லை |

### 3.6 பெறுகை

**பெறுகை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகை திட்டமொன்று தயாரிக் கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகை

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களைச் செயற்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஜனவரி 28 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க நிதி அமைச்சின் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப் பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு செயற்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை |